பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆணி 21 | வெள்ளிக்கிழமை | 06.09.2024 | அதிர்வு 035

## 2 பஸ்கள் மோதியதில் 47 பேருக்குக் காயம்!

### பிபில நாகலவில் சம்பவம்

பிபில நாகல பிரதேசத்தில் 2 பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 47 பேர் கயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 07

# ‘13’ - நடைமுறையாக்கம் என்பது தேர்தல் கால வெற்றுக் காசோலை

## அது தெற்கின் பம்மாத்து என யாழில் அநுர நேற்று விளக்கம்



யாழ்ப்பாணம்,செப்ரெம்பர் 06

‘13”ஐ நடைமுறைப்படுத்துவது அல்லது ‘13 பிளஸ்’ வழங்குவது எனக் கூறுவதெல்லாம் தெற்கு வேட்பாளர்களின் தேர்தல் கால வெற்றுக் காசோலை என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்தார். 06

## 4 இராஜாங்க அமைச்சர்கள் உடனடியாகப் பதவி நீக்கம்!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு இராஜாங்க அமைச்சர்களை உடனடியாக அந்த பதவிகளில் இருந்து நீக்கியுள்ளார்.

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க 06



நேரடி செயற்பாட்டு அரசியலில் இருப்போரை – முழு மூச்சாக அரசியல் செய்து கொண்டிருப்போரை – ஆளுநர்களாக நியமித்து, அவர்கள் ஆளுநராக இருந்து கொண்டு அரசியல் செய்யவும் வழிப்படுத்தியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான்.

ஓர் அரசியல் கட்சியின் தலைவராக அரசியல் செய்து கொண்டிருந்தவரை ஒரு பக்கம் அரசியல் தலைவர் பணியையும் ஆற்றிக்கொண்டு, மறுபக்கம் மாகாண ஆளுநர் பொறுப்பையும் ஆற்ற வழி செய்த முதல் பிரகிருதி ரணில் விக்கிரமசிங்க தான்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின் கீழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் திட்டங்களுக்கு 06



# நாமல் ஜனாதிபதியானதும் உடனே அரசியல் கைதிகளுக்கு விடுதலை!

## காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைக்கு அவரே பதில் தருவாராம்



வடக்கு - கிழக்கு பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைக்கு பதில் வழங்க தான் தயாராக இருக்கிறார் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த போதே ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு நிச்சயமாக ஒரு பதில் வழங்கியாக வேண்டும்.

தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த ஆணைக்குழுக்களை நியமித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

இதற்கு பதில் வழங்க வேண்டும். அந்த பதிலை வழங்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

நான் ஜனாதிபதியாகியதும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வேன். - எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெறுப்பூட்ட கூடிய பிரசாரங்கள் சமூக ஊடகங்களில் அதிகரிப்பு!

## கஃபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் விசனம்

**(ஹஸ்பர் ஏ.ஹலீம்)**



சுதந்திரமானதும் நீதியானதுமான மக்கள் அமைப்பின் (கஃபே அமைப்பின்) கண்காணிப்புகளின்படி, 2024 ஜனாதிபதி தேர்தலின் போது சமூக ஊடகங்களின் ஊடாக பொய்ப்பிரசாரங்கள் மற்றும் வெறுப்பூட்ட கூடிய பிரசாரங்கள் அதிகரித்துள்ளன எனத் தெரிய வந்துள்ளது.

அத்துடன் 2019 ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பை காட்டுகிறது என கஃபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கின் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முந்திய காலப்பகுதிகளில் சமூக ஊடகங்கள் தொடர்பில் கஃபே அமைப்பின் கண்காணிப்பாளர்கள் மேற்கொண்ட கண்காணிப்புகளின்படி, 5 வேட்பாளர்களை இலக்கு வைத்து வெறுப்பூட்டகூடிய பிரசாரங்கள், பொய்யான செய்திகள் மற்றும் தவறான தகவல்கள் பகிரப்படுவது தெரிய வந்துள்ளது. இது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு தடையாக இருப்பதாகவும் அதேபோன்று அமைதியான தேர்தலுக்கு தடையாக இருப்பதாகவும் கஃபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளரான மனாஸ் மக்கின் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சமூக ஊடகங்களின் மூலம் பொய்யான மற்றும் வெறுப்பூட்ட கூடிய பிரசாரங்களால் வன்முறை அதிகரிக்ககூடிய வாய்ப்புக்கள் உருவாகலாம் என கஃபே அமைப்பு எச்சரித்துள்ளது.

அத்துடன் வாட்ஸப் குழுமங்ககளிலும், பேஸ்புக் குழுமங்களிலும் இது போன்று பொய்ப்பிரசாரங்கள் மற்றும் வெறுப்பூட்டுகின்ற பிரசாரங்கள் தொடர்பில் பாதகமான வீடியோ பதிவுகள் பரப்பப்பட்டு வருகின்றது. அதேப் போன்று ஒரே குழுவில் பல்வேறு அரசியல் கருத்துக்களை முன்வைப்பவர்கள் உள்ளமையால் இவ்வாறானவர்கள் தங்களுக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கின்றனர் எனவும், இவை வன்முறையாக மாறக்கூடும் எனவும் கஃபே அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக கஃபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கின், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு இடையூறு விளைவிக்கும் இதுபோன்ற பதிவுகள் மற்றும் வீடியோக்களை சமூக ஊடகங்கள் மூலம் பகிர்வதை தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.




# காங்கேசன் - நாகை கப்பல் நேற்றைய சேவை பாதிப்பு!

## எரிபொருள் விநியோகத்தில் தடங்கலாம்

நாகப்பட்டினத்திற்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையில் நேற்றையதினம் குழப்பகரமான நிலை ஏற்பட்டது. பயணிகள் பெரும் விசனம் வெளியிட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது :-

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தமிழகத்தின் நாகப்பட்டினத்திற்கும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. அது ஒழுங்காக இடம்பெற்று வந்தது.

எனினும் நேற்று காங்கேசனில் கப்பலுக்கான எரிபொருள் விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டதால் சேவை பாதிப்புற்றது.

கப்பல் நேற்றுக் காலை நாகபட்டினத்தில் இருந்து புறப்பட்டு காங்கேசன்துறையை வந்தடைந்தது. பின்னர் காங்கேசன்துறையில் இருந்து நாகபட்டினத்திற்கான பயணத்தை ஆரம்பிப்பதற்கு தயாரான நிலையில் பயணிகளும் கப்பலில் ஏறித் தயாராக இருந்தனர்.

இருப்பினும் கப்பலுக்கான எரிபொருள் விநியோகத்தில் தடை ஏற்பட்டது. திருகோணமலையில் இருந்து வரவேண்டிய எரிபொருள் கப்பலிற்காகக் காத்திருந்தனர். இருப்பினும் எரிபொருள் கப்பல் மாலை வரை காங்கேசன்துறைக்கு வந்து சேரவில்லை. இதனால் நாகைபட்டினத்திற்கான நேற்றைய பயணம் இடைநிறுத்தப்பட்டதாக கப்பலின் கப்டன் அறிவித்தார்.

இதனால் பயணத்திற்கு தயாராக இருந்த பயணிகள் மத்தியில் குழப்ப நிலை உருவாகியது. இந்நிலையில் அறுபது பயணிகளையும் விடுதிகளில் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டதிலும் தாமதம் ஏற்பட்டது.

இதனால் பயணிகள் வீதியில் குழப்பத்தில் ஈடுபட்டனர். இருந்தபோதும் சிறிது நேரத்தில் மாற்று ஏறபாடுகள் செய்து கொடுக்கப்பட்டதனால் பயணிகள் அமைதியடைந்தனர்.




# துணுக்காயில் கண்ணிவெடி வெடித்ததில் நான்கு பெண் பணியாளர்கள் படுகாயம்!

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம். - துணுக்காய் பகுதியில் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த கண்ணிவெடி அகற்றும் பெண் பணியாளர்கள் நால்வர் கண்ணிவெடி விபத்தில் படுகாயமடைந்துள்ளனர். நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தங்கராசா ராஜேஸ்வரி (வயது 43), கதிரேசு கவிகலா (வயது 40), கிஷோர் மோகனாம்பாள் (வயது 39), சிவரூபன் தமிழினி ஆகியோரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த நால்வரில் மூவர் மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்களுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.







# தமிழ்ப் பொது வேட்பாளருக்கு திருகோணமலையில் வரவேற்பு

“நமக்காக நாம்” பிரசார பயணத்தின் போது தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரனுக்கு திருகோணமலை மாவட்டத்தில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

சங்கு சின்னத்திற்கு ஆதரவு கோரி பொலிகண்டி தொடக்கம் பொத்துவில் வரையான தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன் பங்கேற்கும் “நமக்காக நாம்“ பிரசார பயணம் கிழக்கு மாகாணத்தில் நேற்று வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்திற்கான பரப்புரை நடவடிக்கைகளுக்காக சென்ற தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு எல்லைக்கிராமமான திரியாய் பகுதியில் வைத்து சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் எல்லையில் இருந்து நூற்றுக்கணக்கான தமிழ் இன உணர்வாளர்களின் வரவேற்ப்புடன், திருகோணமலை மாவட்டத்திற்கு தமிழ்ப் பொது வேட்பாளர் வரவேற்கப்பட்டு பேரணியாக அழைத்துச் செல்லப்பட்டார். இதன் போது வாகனப் பேரணியாக இளைஞர்கள் எழுச்சியுடன் வரவேற்று அழைத்துச் சென்றிருந்தனர்.

கும்புறுப்பிட்டி கிராமத்தில் இடம்பெற்ற திருகோணமலை மாவட்டத்திற்கான முதலாவது தேர்தல் பரப்புரை கூட்டத்தில் பா. அரியநேத்திரனுக்கு ஆதரவாக தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பை சேர்ந்த யதீந்திரா உள்ளிட்ட பிரமுகர்களும் அப்பகுதி பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்று உரைகளை ஆற்றியிருந்தனர்.

இதன்போது நூற்றுக்கணக்கான பொது மக்கள் பங்கேற்று தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு தமது ஆதரவினை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.















# வவுனியாவிலும் அநுரவின் கூட்டத்தில் மைதானம் நிறைந்த மக்கள் வெள்ளம்

(கே.வசந்தன்)

தேசியமக்கள்சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்கவின் பிரச்சாரக் கூட்டம் வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நேற்றய் இடம்பெற்றது.

மக்கள்விடுதலை முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் உபாலி தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

இக்கூட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இரண்டாயிரத்திற்கும் மேற்மட்ட பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிதி ஒதுக்கீடு செய்வதும், அந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும், இது வரையில் நடைமுறையில் இருந்த முறைமைதான்.

தேசியப் பட்டியல் எம்.பிக்களுக்கு மட்டுமே இத்தகைய ஒதுக்கீடுகளை இலங்கை முழுவதும் பரிந்துரைப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. மற்றபடி மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்ட எம்.பிக்கள் அந்தந்த மாவட்டங்களுக்குள்தான் திட்டங்களை பரிந்துரைக்க வேண்டப்பட்டனர்.

இதிலும் மாற்றம் – குழப்பம் – ஏற்படுத்தினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எம்.பிகள் தாங்கள் தெரிவு செய்யப்படாத மாவட்டங்களுக்கும் திட்டங்களை பரிந்துரைத்து நிதி ஒதுக்கீடு பெற அனுமதித்தார் ரணில் விக்கிரமசிங்க.

அதையும் தாண்டி, இப்போது எம்.பிக்களே அல்லாத – முன்னாள் எம்பிக்கள் – முன்வைக்கும் திட்டப் பரிந்துரைகளுக்கும் அவர்களின் பெயரில் நிதி ஒழுக்கீடு செய்து, திட்டங்களை முன்னெடுக்க அனுமதித்தார் ரணில்.

இப்படி இலங்கையின் ஜனநாயக முறைமைகளில் அவற்றைக் கேலிக் கூத்துக்கு உள்ளாக்கியுள்ளார் ரணில் விக்கிரமசிங்க.

இந்த குளறுபடித்தனங்கள் இன்னும் எதுவரை நீடிக்க போகின்றனவோ தெரியவில்லை.

\+ + +

மாகாண சபை தேர்தல்கள் தொடர்பில் நாமல் ராஜபக்ஷ நீலிக்கண்ணீர் வடித்தாலும், விவாதம் இன்றி அந்தத் தேர்தல் சட்டத்தை திரும்பிக் கொண்டு வருவதற்கு கிடைத்த வாய்ப்பை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினரும் தங்களுக்குள் முரண்பட்டுக் குழப்பி விட்டனர் என்று, நாமல் ராஜபக்ஷ சொல்வதில் உண்மை இருக்கத்தான் செய்கின்றது.

ஆனாலும் அது குறித்து நீலிக் கண்ணீர் வடித்து, ஆரவாரமாக அரசியல் விமர்சனம் செய்யும் தகுதி தமக்குக் கிடையவே கிடையாது என்பதை நாமல் ராஜபக்ஷ ஒரு தடவை எண்ணிப் பார்ப்பது நல்லது.

இந்த தசாப்தத்தின் ஆரம்பத்தில் ஜனாதிபதி கோட்டாபய தலை மையின் கீழ் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் நாமல் ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷக்களின் ஆட்சி இரண்டு வருடங்களுக்கு மேல் நீடித்தது.

அந்த வேளையில் ராஜபக்ஷக்கள் நினைத்திருந்தால் மாகாண சபை தேர்தல் சட்டத்தை வலு சிம்பிளாக – எந்த நெருக்கடியோ பின்னடைவோ இன்றி – கொண்டு வந்திருக்க முடியும்.

அதைச் செய்யத் தவறி விட்டு, இப்போது தேர்தல் களத்தில் அந்த நடவடிக்கையை முரண்பட்டு தமிழரசு கட்சியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தடுத்து விட்டனர் என்று கிண்டல் பண்ணும் தகைமையோ, தகுதியோ, விவஸ்தையோ நாமலுக்கு கிடையாது என்பதை கவனத்தில் கொண்டு அரசியல் விடயங்களை அவர் முன்னெடுப்பது நல்லது.



# 36 மணித்தியாலங்களில் பல பகுதிகளில் மழை

எதிர்வரும் 36 மணித்தியாலங்களில் நாட்டின் பல பகுதிகளில் மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி மேல், சபரகமுவ, மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடும்.

ஊவா மாகாணத்திலும், மட்டக்களப்பு மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இன்றிரவு வேளைகளில் மழை பெய்யக்கூடும்.

அத்துடன், மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் மணித்தியாலத்துக்கு 35 முதல் 45 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று அதிகரித்து வீசக்கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

## 4 இராஜாங்க அமைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் பிரேமலால் ஜயசேகர, மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹொான் பிரியதர்ஷன டி சில்வா, நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் ஆகியோர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 47(3) (அ) பிரிவின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இவர்கள் பதவி நீக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘13’- நடைமுறை...

நேற்றையதினம் வியாழக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை கூட்டம் இடம்பெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களிடம் 13ஐ வைத்து வியாபாரம் செய்வதற்கு நான் வரவில்லை. அந்த வியாபாரத்தை செய்யும் நோக்கமும் எனக்கு இல்லை.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ் மக்களுக்கு 13 ஐக் காட்டி வாக்குகளைப் பெறும் முயற்சிகளைத் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றனர்.

நான் தமிழ் மக்களிடம் 13 ஐத் தருகிறேன் என வியாபாரத்தை கூற மாட்டேன். ஒட்டுமொத்த இலங்கை மக்கள் விரும்பும் மாற்றத்தை உருவாக்குவதோடு புதிய அரசியலமைப்பை ஏற்படுத்துவேன்.

நாட்டில் நீண்ட காலமாக புரையோடி உள்ள லஞ்சம், ஊழல்வாதிகளை அப்புறப்படுத்தி, புதிய இலங்கையை உருவாக்குவதே எனது இலக்கு. அதற்காகவே மக்கள் எங்களோடு அணி திரண்டுள்ளனர்.

நாட்டு மக்கள் எம்முடன் திரண்டுள்ள நிலையில் சுமந்திரன் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கி தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை சீரழிக்கப் பார்க்கிறார்.

சஜித் பிரேமதாஸ 13 ஐத் தரப் போகிறாரா அல்லது 13 பிளஸ் தரப் போகிறாரா என்பது தொடர்பில் தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.

நாங்கள் நாட்டை கொள்ளை அடிக்கவில்லை. நாட்டு மக்களைக் கடனாளியாக்கவில்லை. நாட்டைக் கொள்ளையடித்தவர்களும் நாட்டைக் கடனாளியாக்கியவர்களும் தற்போது ஜனாதிபதி வேட்பாளராக களம் இறங்கிய சஜித் மற்றும் ரணில் பக்கமே உள்ளனர்.

இது ஏன் கூறுகிறேன் என்றால் ராஜபக்ஷக்கள் நாட்டைக் கொள்ளை அடித்து விட்டார்கள் எனக் கூறிய ரணில் தரப்பினரில் சிலர் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸ பக்கம் உள்ளனர்.

அதேபோல மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ, ராஜபக்ஷ குடும்பத்தின் ஊழல், மோசடிகளை மூடி மறைப்பதற்காக ஜனாதிபதி தேர்தலில் களம் இறக்கப்பட்டுள்ளார்.

இவருடன் ஊழல் மோசடிகளை தடுப்போம் என கூறி வந்த ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க பக்கத்தில் இருந்த சிலர் நாமல் ராஜபக்ஷவின் பக்கத்துக்கு சென்றுள்ளனர்.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கப் போனால் நாமல், சஜித், ரணில் அணிகள் நாட்டைத் திருடிய – நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்ற – நபர்களை உள்ளடக்கிய கூட்டமே. பகுதி பகுதியாக மூவர் பக்கமும் அவர்கள் பிரிந்து நிற்கின்றனர்.

இவர்களால் நாட்டை அழித்தவர்களை ஒன்றுமே செய்ய முடியாது. ஏனெனில் மூவரும் ஒருவரை ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்துள்ளார்கள்.

ஆகவே தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்கள் எதிர்பார்த்துள்ள மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு மக்கள் தயாராக இருக்கின்ற நிலையில், வடக்கு மக்களும் இந்த மாற்றத்தில் பங்கெடுக்கத் தயாராக வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

(யாழ். கூட்ட விவரம் பற்றிய மேலதிக செய்தி, படங்கள் உள்பக்கத்தில்)

# இராஜினாமாச் செய்த கையோடு சஜித்தின் மேடையில் முஸம்மில்



”கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் ஆளுநர்கள் அரசியலில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக ஆளுநர்கள் நேரடியாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இது பொறுத்தமற்ற கலாசாரமாகும்.”

– இவ்வாறு முன்னாள் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே. எம்.முஸம்மில் தெரிவித்தார்.

ஆளுநர் பதவியை நேற்று இராஜினாமாச் செய்த அவர், மாலை மினுவாங்கொடையில் இடம்பெற்ற சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மேடையேறி அவருக்கு தனது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார். இதன் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

”எனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்து விட்டுத்தான் இந்த மேடையில் பேசுகின்றேன். நான் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்திலேயே ஆளுனராக நியமிக்கப்பட்டேன். ஆனால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் எனது பதவி நீடிக்கப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நான் வடமத்திய மாகாண ஆளுநராக செயற்பட்ட போது அவர் குருணாகல் பிரதேசத்துக்கு விஜயம் செய்தார். அங்கு அவரை வரவேற்பதற்காக நான் சென்ற போது, ஆளுநர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது எனக் கூறினார். அவரது ஆட்சி காலத்தில் ஆளுநர்கள் அரசியலில் ஈடுபடத் தடை இருந்தது.

ஆனால் இன்று அவ்வாறல்ல. ஏனைய 7 மாகாணங்களின் ஆளுநர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்காக நேரடியாக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுகின்றனர். நான் ரணசிங்க பிரேமதாசவின் பல்கலைக்கழகத்தில் கற்றுள்ளதால் அந்த கலாசாரத்தை பின்பற்றுவதில்லை. எனவே தான் இராஜிநாமாக் கடிதத்தைக் கையளித்தேன்.

ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தித்து தீர்மானத்தை எடுக்குமாறு ஜனாதிபதி செயலகத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் ஆழமாக சிந்தித்துத் தான் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளேன். அதே போன்று இந்நாட்டு மக்களும் 21ஆம் திகதி சரியான தீர்மானத்தை எடுத்து தமது கடமையை நிறைவேற்ற வேண்டும்.”– என்றார்.

(முன்னர் வந்த செய்தி 15ஆம் பக்கத்தில்..)

## 2 பஸ்கள் மோதியதில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விபத்து நேற்று இரவு 7.30 மணி அளவில் இடம்பெற்றுள்ளது.

பிபில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிபில – அம்பாறை வீதியில், நாகல பிரதேசத்தில் பிபிலையில் இருந்து அம்பாறை நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும், பின்னால் அதே திசையில் சென்ற பஸ்ஸ/ம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு பஸ்ஸில் தனியார் ஆடை தொழிற்சாலையில் பணிபுரியும் சிலர் பயணித்துள்ளனர்.

2 பஸ்களிலும் பயணித்த 47 பயணிகள் விபத்தில் காயமடைந்து பிபில வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தனியார் ஆடை தொழிற்சாலை ஒன்றின் ஊழியர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ், ஊழியர்கள் இறங்குவதற்காக நின்ற போது மற்ற பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பிபில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# யாழ். நகரில் அநுரவின் கூட்டம்

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் யாழ்ப்பாணத்தில் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்கவின் பங்கேற்புடன் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்ற்ய் மாலை பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

பிரசாரக் கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பிரசாரக் கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டது. பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

அநுர குமார திஸாநாயக்க திசைகாட்டி சின்னத்தில் ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நாமல் தயாரா?

மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகக் களம் இறங்கியிருக்கும் நாமல் ராஜபக்ஷ கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் வடக்கு - கிழக்குத் தமிழர்கள் தொடர்பாக இரண்டு விடயங்களை சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

ஒன்று - அரசியல் கைதிகள் பற்றியது.

மற்றையது - வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை தொடர்பானது.

தாம் ஜனாதிபதியானால் உடனடியாகவே - தயக்கமின்றி - அரசியல் கைதிகளை விடுதலை செய்வார் என்று அவர் பகிரங்கமாக உறுதியளித்திருக்கிறார்.

அவரது இந்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது. இப்படி அவர் அறிவிப்பதற்குக் காரணம் உண்டு. நல்லாட்சி அரசின் காலத்தில் பல்வேறு வழக்குகளின் பெயரில் அவரே நீண்ட காலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

அச்சமயம் தடுப்பு காவலில் இருந்த பல நூறு தமிழ் அரசியல் கைதிகளுடன் அவருக்கு நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அந்தப் பரிச்சயம் தமிழ் அரசியல் கைதிகளின் அவல நிலையை அவரது மனதை அப்போதே தொட வைத்திருந்தது என்பது பின்னர் சிறையில் இருந்து வெளியே வந்து அவ்வப்போது அந்தத் தமிழ்க் கைதிகள் குறித்து அவர் வெளியிட்ட தகவல்கள் மூலம் வெளிப்பட்டு வந்தன.

இந்தக்கைதிகளைஏனையசிங்களத்தலைவர்கள் போல பயங்கரவாதம் தொடர்பான கைதிகளாகப் பார்க்காமல், அவர்கள் அரசியல் கைதிகள் என்ற உண்மையான நிலையை - யதார்த்தத்தை - ஏற்று அந்தப் பெயரில் அவர்களைச் சுட்டி, அறிவிப்பு விடுத்த நாமல் ராஜபக்ஷ அதற்காக பாராட்டப்பட வேண்டியவரே.

அடுத்தது - காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை. இதில் நேரடியாகப் பொறுப்பு கூறும் கடப்பாடு அவருக்கு இல்லாவிடினும், தார்மீக ரீதியில் அந்தப் பழி அவரையும் சூழ்ந்தது தான்.

இப்படி யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பல்லாயிரம் தமிழர்கள் வல்வந்தமாகக் காணாமலாக்கப்பட்ட காலத்தில் ஜனாதிபதி அவரின் தந்தை மஹிந்த ராஜபக்ஷதான். படைகளின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவும் காரணமாகவும் இருந்தவர் பாதுகாப்புச் செயலாளரான அவரது சித்தப்பா கோட்டாபய ராஜபக்ஷவே. அச்சமயத்தில் நாட்டின் அமைச்சரவை விடயங்கள் உட்பட அரசு கட்டமைப்பையே வழிநடத்துவராக இருந்த அமைச்சர் அவரின் சித்தப்பா பஸில் ராஜபக்ஷ.

ஆகவே, தமிழர்கள் வகைத்தொகையின்றிக் கடத்திக் காணாமலாக்கிய சம்பவங்களில் அரசுக் கட்டமைப்புக்குப் பொறுப்பு இருக்குமாயின் சட்ட ரீதியில் அதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் நாமலின் இந்த உறவுகள்தான். அவர்கள் சார்பில் அதற்குப் பதில் - வகை - கூற வேண்டியவர் அவர்களுடைய வழித்தோன்றலாக அரசியலில் நிற்கும் நாமல் ராஜபக்ஷவே.

“காணாமலாக்கபட்டோர் பிரச்சினை தொடர்பில் தொடர்ந்து ஆணைக்குழுக்களை நியமித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அந்தப் பிரச்சினைக்கு நிச்சயமாக ஒரு பதில் வழங்கியாக வேண்டும். அந்தப் பதிலை வழங்குவதற்கு நான் தயாராக இருக்கிறேன்” - என்று அவர் கூறியிருக்கின்றார்.

அப்படி அவர் பதில் கூற முற்படுவது நல்லதுதான். ஆனால் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் 15 ஆண்டுகள்கழிந்தும்போராடிக்கொண்டிருப்பது நாமலின் பதிலுக்கு அல்ல. தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிந்து அம்பலப்படுத்துவதற்குத்தான்.

ஆகவே, நாமல் கூறக்கூடிய பதில் என்பது அந்த உறவுகளைச் சமாளிக்கும் விளக்கமாக இருந்தால் அதில் அர்த்தமில்லை. அதையும் தாண்டி, காணாமலாக்கப்பட்ட அந்த உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை பக்கச்சார்பின்றி, நீதி - நியாயமாக விசாரித்து, உண்மைகளைக் கண்டறியும் ஏற்பாடு ஒன்றாகத்தான் - அதுவும் நம்பகமான ஏற்பாடு ஒன்றாகத்தான் - இருக்க வேண்டும்.

அதைத் தமது பதிலாக அறிவித்து, உண்மைகளை வெளிப்படுத்தச் செய்ய அவர் தயாரா?

# மீனவர்களுக்கான அபராத தொகை தள்ளுபடிக்கும் நடவடிக்கை தேவை

## மத்திய அமைச்சருக்கு ஸ்டாலின் கடிதம்

இலங்கை கடற்படை சிறைபிடித்த மீனவர்கள், படகுகளை உடனே விடுவிப்பதுடன், மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராத தொகையை தள்ளுபடி செய்யவும் விரைவாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மத்திய அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று எழுதிய கடிதத்தில்,

“தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது அடிக்கடி கைது செய்யப்படுவது அவர்களது வாழ்வாதாரத்தை மிகவும் பாதிக்கிறது.

தமிழகத்தின் புதுக்கோட்டையைச் சேர்ந்த 4 மீனவர்களை அவர்களது மீன்பிடிப் படகுடன் இலங்கைக் கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர். இந்தப் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள் தமிழக மீனவர்களுக்கு பல தலைமுறைகளாக வாழ்வாதாரமாக திகழும் நிலையில், மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதும் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தமிழக மீனவர் சமூகத்தினருக்கு மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், கடந்த ஜுலை 21 ஆம் திகதி மீன்பிடித்துக் கொண்டிருந்த போது கைது செய்யப்பட்ட 12 தமிழக மீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றம், 1.5 கோடி ரூபா அபராதம் விதித்துள்ளது.




இது ஏற்கெனவே துயரத்தில் உள்ள மீனவ குடும்பங்களை மிகவும் வேதனைக்குள்ளாக்குவதுடன், அவர்களுக்கு மிகப்பெரிய இழப்பையும் ஏற்படுத்தும்.

எனவே, இலங்கை வசம் உள்ள மீன்பிடிப் படகுகளை விடுவிக்கவும், மீனவர்களை தாயகம் அழைத்து வரவும், மீனவர்கள் மீது விதிக்கப்பட்ட அபராதத் தொகை மனிதாபிமான அடிப்படையில் தள்ளுபடி செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.”– என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண அனைத்து கட்சி கூட்டம்

## மத்திய அரசுக்கு அகில இந்திய மீனவர் காங்கிரஸ் கோரிக்கை



தமிழக மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண மத்திய அரசு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும் என அகில இந்திய மீனவர் காங்கிரஸின் தேசிய தலைவர் எஸ். ஆம்ஸ்ட்ராங் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அகில இந்திய மீனவர் காங்கிரஸின் தேசிய தலைவர் எஸ். ஆம்ஸ்ட்ராங் பெர்னாண்டோ வெளியிட்டுள்ள அறிக்கையில்.

“தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது, சிறைப்பிடிப்பது, படகுகளை கைப்பற்றுவது, வலைகளை அறுப்பது போன்ற அத்துமீறல்களில் இலங்கை கடற்படை தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

குறுகிய கடல் எல்லை கொண்ட பகுதிகளில் ஒரு நாட்டு மீனவர்கள் மற்றொரு நாட்டின் எல்லைக்குச் சென்று மீன் பிடிப்பது அடிப்படை உரிமையாக பல்வேறு நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நாடுகளின் கடல் எல்லை தெளிவாக வரையறுக்கப்படுவதற்கு முன்பாகவே காலம் காலமாக பாரம்பரியமாக மீன்பிடித்து வரும் மீனவர்களின் உரிமையை எல்லைகளால் பறிக்கவும் கூடாது.

கடந்த ஆகஸ்ட் மாதம் தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளத்திலிருந்து கடலுக்குச் சென்ற அந்தோணி மகாராஜா என்பவருக்கு சொந்தமான விசைப்படகை கைப்பற்றி அதிலிருந்து 12 மீனவர்களை இலங்கை கடற்படை புத்தளம் சிறையில் அடைத்தது. இந்த வழக்கு செவ்வாய்கிழமை புத்தளம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, 12 மீனவர்களுக்கும் தலா 1.5 கோடி இலங்கை ரூபா அபராதம் செலுத்த வேண்டும் என்றும், அபராதத்தை கட்ட தவறும் பட்சத்தில் தலா ஒவ்வொரு மீனவரும் ஆறு மாத காலம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது.

பல பில்லியன் கோடி அந்நிய செலவாணியை ஈட்டித் தரும் மீனவர்களை அபராதம் மூலம் முடக்குவதன் மூலம், இந்திய பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், இந்திய, இலங்கைக்கும் உள்ள இறையாண்மைக்கு கூடப் பின்னடைவை ஏற்படுத்தும். நட்பு நாடு என்று கூறிக் கொண்டே தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை நிலை கொள்ளச் செய்யும் இலங்கை அரசின் இந்த அடிப்படை மனித உரிமைகளை மீறும் போக்கினை மத்திய பா.ஜ.க. அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

நாடாளுமன்ற தேர்தல்களில் தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக பா.ஜ.க. அளித்த வாக்குறுதிகள் எதுவுமே 10 ஆண்டுகளில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு நிறைவேற்ற வில்லை. மீனவர் நலனில் அக்கறையற்ற மத்திய அரசு உடனடியாக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும். மீனவர்கள் பிரச்னையில் இலங்கை அரசை மனிதாபிமானத்துடன் முடிவு எடுக்க வைப்பதுடன், தமிழக மீனவர்களுக்கு சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கும் சட்டத்தை திரும்பப் பெற மத்திய அரசு ராஜதந்திர நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# மதத்தைப் பயன்படுத்தி மோதல்கள் வேண்டாம்

## போப் பிரான்சிஸ் வேண்டுகோள்



மதத்தைப் பயன்படுத்தி மோதல்களை உருவாக்க வேண்டாம் என போப் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆசிய – பசிபிக் பிராந்தியத்திற்கான தனது 11 நாள் பயணத்துடன் இணைந்து இந்தோனேசியா சென்ற போப், தலைநகர் ஜகார்த்தாவில் மத நல்லிணக்கம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான பிரகடனத்தில் கையெழுத்திட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போப் பிரான்சிஸ் தனது இந்தோனேசியா பயணத்திற்குப் பிறகு, பப்புவா நியூ கினி, திமோர் லெஸ்டே மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் செல்லவுள்ளார்.

# சுனிதா வில்லியம்ஸ் இல்லாமல் பூமிக்குத் திரும்பும் விண்கலம்








இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இரண்டு விண்வெளி ஆராய்ச்சியாளர்களை ஏற்றிச் சென்ற போயிங் ஸ்டார்லைனர் விண்கலம், ஆளே இல்லாமல் பூமிக்குத் திரும்பவுள்ளது.

தொழில்நுட்ப சிக்கல்கள் இருந்ததால் இந்த விண்கலத்தின் மூலம் அவர்களை பூமிக்குக் கொண்டு வருவது பாதுகாப்பானதா என்ற சந்தேகம் எழுந்தது.

பின்னர் அந்த இரண்டு விண்வெளி ஆராய்ச்சியாளர்களும் இன்னும் சில மாதங்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திலே தங்கியிருந்து "ஸ்பேஸ் எக்ஸ்" நிறுவனத்தின் விண்கலம் மூலம் பூமிக்குத் திரும்புவார்கள் என்று நாசா அறிவித்தது.

அதற்கு முன்னதாகப் போயிங் ஸ்டார்லைனர் விண்கலம் பூமிக்கு ஆளில்லாமலேயே திரும்பும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டார்லைனர் விண்கலம் பூமிக்குத் திரும்புவதற்கான வேலைத்திட்டங்களை நாசாவும் போயிங் நிறுவனமும் நிறைவு செய்திருந்தன.

இந்த நிலையில், இந்த இந்த விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து பூமியை நோக்கிய தனது பயணத்தை ஆரம்பிக்கும்.

இறுதிக்கட்டத்தில் ஏதேனும் தொழில்நுட்ப சிக்கல்கள் ஏற்பட்டால் அல்லது வானிலையில் மாற்றங்கள் ஏற்பட்டால் மாத்திரம் இந்தப் பயணத்தில் மாற்றங்கள் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இருவரும் 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் பூமிக்குத் திரும்பவார்கள் என நாசா அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# பாகிஸ்தானில் அரச ஊழியர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தத் தடை





அரச ஊழியர்கள் அனைவரும் அனுமதியின்றி சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் வகையில் பாகிஸ்தான் அரசாங்கம் உத்தரவொன்று பிறப்பித்துள்ளது.

பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு எதிராகத் தகவல்கள் வெளியிடுவதைத் தடுக்கும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களின் நடத்தைகள் குறித்து 1964 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

அரச ஊழியர்கள் அந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும் என பாகிஸ்தான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, அரச ஊழியர்கள் அனுமதியின்றி எந்தச் சமூக வலைத்தளத்தையும் பயன்படுத்த முடியாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# அரவிந்தகுமாரினால் கையகப்படுத்தப்பட்டிருந்த தோட்ட இல்லம் நிர்வாகத்தினால் பொறுப்பேற்பு

லிந்துலை - ஹென்போல்ட் தோட்டத்தில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமாரினால் கையகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்த தோட்டத்துக்குச் சொந்தமான இல்லம் தோட்ட நிர்வாகத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய இந்த இல்லம் இன்று ஹட்டன் தோட்ட நிர்வாகத்தினால் பொறுப்பேற்கப்பட்டதாக தோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

1987 ஆம் ஆண்டு அரவிந்தகுமார் ஹென்போல்ட் தோட்டத்தில் பிரதான எழுதுவினைஞராக பணிபுரிந்தபோது அந்த இல்லம் அவருக்குத் தோட்ட நிர்வாகத்தினால் வழங்கப்பட்டது.

அரவிந்தகுமார் தோட்டத்தை விட்டு வெளியேறியதன் பின்னரும் அந்த இல்லத்தை அவர் தோட்ட நிர்வாகத்திடம் கையளிக்காது அதனைப் புனரமைத்து அவரது பொறுப்பிலேயே பராமரித்து வந்துள்ளார்.

இதனையடுத்து தோட்ட நிர்வாகம் அரவிந்தகுமாருக்கு எதிராக நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தது.

நீண்டகாலமாக நிலுவையிலிருந்த வழக்கில் உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறுமாறு அரவிந்தகுமாருக்கு நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தொடர்ந்து நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக அரவிந்தகுமார் மேன்முறையீடு செய்த நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றமும் அதே தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்த நிலையிலேயே லிந்துலை பொலிஸின் பாதுகாப்புடன் நீதிமன்ற பதிவாளர் உள்ளிட்ட உத்தியோகஸ்தர்கள் அந்த இல்லத்திற்கு சென்று அங்கிருந்த அனைத்து உடமைகளையும் பட்டியலிட்டுள்ளனர்.

இந்தப் பட்டியலின் பிரதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த இல்லம் மற்றும் உடமைகள் தோட்ட நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




# அரச, தனியார்த்துறை ஊழியர்களுக்கு வாக்களிக்க விடுமுறை வழங்குங்கள்!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல்

எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின் போது, அரச மற்றும் தனியார்த்துறைகளில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க தொழில் வழங்குநர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

சம்பளம் மற்றும் சொந்த விடுமுறையினை இழக்காத வகையில் வாக்காளர்களுக்கு, தமது வாக்கினை அளிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அந்த ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களின் அலுவலர்களுக்கு, விசேட விடுமுறை தொடர்பான தாபன விதிக்கோவையில், ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்குத் தொடர்ச்சியாக 4 மணிநேரம் தேவை என்பதால், அன்றைய தினம் விசேட விடுமுறை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் தனியார்த்துறை ஊழியர்களுக்கு அவ்வாறு எவ்வித எழுத்துமூல கட்டளைகளும் இன்மையினால், மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் அமைச்சு, தொழில் திணைக்களம் என்பன தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கடந்த காலங்களில் ஏற்படுத்திய உடன்பாட்டுக்கு அமைய, இந்த தேர்தலிலும் அதனைக் கடைப்பிடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தனியார்த்துறையில் பணியாற்றுபவர்கள் தங்களது சேவை நிலையத்திலிருந்து வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்ல வேண்டிய தூரம் 40 கிலோ மீற்றர் அல்லது அதற்குக் குறைவாக காணப்படுமாயின் அரைநாள் விடுமுறையும், 40 முதல் 100 கிலோமீற்றருக்கு இடைப்பட்ட தூரம் எனில் ஒருநாள் விடுமுறையும் வழங்கப்படல் வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 100 முதல் 150 கிலோ மீற்றருக்கு இடைப்பட்ட தூரத்திற்கு செல்ல வேண்டியவர்களுக்கு ஒன்றரை நாள் விடுமுறையும் 150 கிலோ மீற்றருக்கும் அதிக தூரம் செல்ல வேண்டிய வாக்காளர்களுக்கு 2 நாள்கள் விடுமுறையும் வழங்கப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# நாட்டின் ஆட்சியாளர்கள் குற்றவாளிகளாக கண்டறியப்பட்டவர்கள் என்கின்றார் அநுர



நாட்டின் அண்மைய கால ஆட்சியாளர்கள் உயர் நீதிமன்றினால் குற்றவாளிகள் எனக் கண்டறியப்பட்டவர்கள் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜா– எல பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு, அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"முன்னாள் ஜனாதிபதிகளான மைத்ரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை உயர்நீதிமன்றம் குற்றவாளிகள் என அறிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் விடயத்தில் உயர் நீதிமன்ற தீர்ப்பை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை. பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை அவர் நியமிக்கவும் இல்லை.

இவ்வாறானவர்களின் தவறான ஆட்சி காரணமாக, வெளிநாடுகளில் இலங்கை மீதான தவறான புரிதல் ஏற்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 23 லட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் 40 லட்சம் சுற்றுலாப்பயணிகளைக் குறுகிய காலத்தில் இலங்கைக்கு அழைத்துவருவதே முதன்மை இலக்காக உள்ளது."– என்றார்.



# குறைந்தபட்சம் 25 ஆயிரம் ரூபா தனியார் துறையினருக்கு வேதனம்

## வகுக்கப்படும் என்கிறார் சஜித் பிரேமதாஸ



"தனியார் துறையினரின் குறைந்த பட்ச சம்பளம் 25 ஆயிரம் ரூபா வரை கொண்டு வருவதற்கான திட்டம் வகுக்கப்படும். ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற வகையிலான சேவைக் கொள்கையும் தயாரிக்கப்படும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"எமது நாட்டின் பொருளாதார விருத்திக்கு பாரிய பங்களிப்பை வழங்குகின்ற தனியார் துறை ஊழியர்களுக்கான பலமான வேலைத் திட்டங்கள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார விருத்திக்குத் தனியார் துறையின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

தொழில் வழங்குனர்களின் முதலீட்டைப் போலவே ஊழியர்களும் மிகவும் சிரமதத்துக்கு மத்தியில் பாரிய பணிகளைச் செய்து வருகின்றனர்.

அனைத்து பாடசாலைகளையும் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாக மாற்றி, கல்வித் துறையைப் பலப்படுத்துவோம்.

இந்தப் பொறுப்பை ஐக்கிய மக்கள் கூட்டணி நிறைவேற்றும்."– என்றார்.




# கட்டுநாயக்காவில் சீனப் பிரஜை கைதாகி நாடு கடத்தப்பட்டார்!

சர்வதேச பொலிஸால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சீன பிரஜை ஒருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் நாடு கடத்தப்பட்டுள்ளார்.

சீனாவில் பாரியளவில் பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் 28 வயதுடைய சீனப் பிரஜையே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

மாலைத்தீவில் இருந்து நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அவர், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு விமான நிலைய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவரை மாலைதீவுக்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்.



# சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்காக ஆளுநர் பதவியைத் துறந்தார் முஸம்மில்

ஊவா மாகாண ஆளுநர் பதவியிலிருந்து ஏ.ஜே.எம். முஸம்மில் விலகியுள்ளார்.

அவர் தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்தக் கடிதத்தில், தமது பதவி விலகலின் பின்னர் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவைத் தாம் ஆதரிக்கவிருக்கின்றார் எனவும் அறிவித்துள்ளார்.

அதேநேரம் பல ஆளுநர்கள் பதவியில் இருக்கும் போதே, வெவ்வேறு ஜனாதிபதி வேட்பாளர்களுக்குப் பிரசாரம் செய்து வருகின்றமை தொடர்பாகத் தாம் அதிருப்தி கொண்டிருக்கின்றார் எனவும் அவர் கூறியுள்ளார்.



# பழங்களின் விலைகள் சடுதியாகக் குறைப்பு

சந்தையில் பழங்களின் மொத்த விலை சடுதியாகக் குறைந்துள்ளது.

வாழைப்பழம், பப்பாசி, தர்பூசணி, கொய்யா, விளாம்பழம் ஆகியவற்றின் விலைகள் சடுதியாகக் குறைந்துள்ளன.

கடந்த காலங்களில் 450 ரூபாவாகவிருந்த ஒரு கிலோ கிராம் அன்னாசியின் விலை தற்போது 200 ரூபாவாகக் குறைந்துள்ளது.

அத்துடன், கொய்யா பழம் கிலோவொன்று 90 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.



# முல்லை அரச அதிபருடன் நேற்று இந்தியத் துணைத்தூதர் சந்திப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனைச் சந்தித்து மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்கள் தொடர்பிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள், பிரச்சினைகள் தொடர்பிலும் மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு அபிவிருத்தித் தேவைகள் தொடர்பிலும் மாவட்ட அரசாங்க அதிபரினால் யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதுவருக்கு விவரிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், யாழ். இந்திய துணைதூதரகத்தின் இணைப்பாளர் ஆகியோரும் உடனிருந்தனர்.









# இன்றைய ராசி பலன்கள் - 06.09.2024

## மேஷம்

கோவிலுக்கு செல்லுதல் மற்றும் பக்தி ஈடுபாடு இன்று உங்களுக்கு நன்மை அளிக்கும். தியானம் மேற்கொள்வது சிறந்தது.

இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். நீங்கள் செய்யும் பணியில் அறிவாற்றல் பெறுவதன் மூலம் நன்மை விளையும்.

உறவில் பொறுமையை கடைபிடியுங்கள். பெரியவர் களின் ஆலோசனை கேட்பது சிறந்தது.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளை சிறப்பான முறையில் ஆவணங் களில் பராமரிக்க வேண்டும்.

தலை வலி மற்றும் உயரமுத்தம் காரணமாக ஆரோக்கியம் சிறிது பாதிக்கப்படும்.

## ரிஷபம்

இன்று பிரார்த்தனை சிறந்த பலனளிக் கும். இந்து முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் இது மகிழ்ச்சியான நாளாக இருக்காது. நீங்கள் தவறு செய்ய வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்க வும்.

குடும்பத்தில் சில குழப்பங்கள் காணப்படும். உங்கள் தனிப்பட்ட விஷயங்களில் கவனம் செலுத்த வேண் டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். சேமிப்பு பழக்கத்தை மேற்கொள்வது சிறந்து.

கண்களில் எரிச்சல் மற்றும் தோள் வலி போன்ற பாதிப்புகள் காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## மிதுனம்

உங்களுக்கு வளர்ச்சி தரும் பயனுள்ள செயல்களில் பங்கு கொள்ளுங்கள். பங்கு வர்த்தகம் உங்களுக்கு நல்ல லாபம் தரும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். நீங்கள் உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்றுவீர்கள். பணியில் நற்பெயர் பெறுவீர்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். இன்று உற்சாகத்தையும் காதல் உணர்வையும் அனுப விப்பீர்கள்.

இன்று ஆன்மீக காரியங்களுக்கும் தொண்டுகள் செய்வதற்கும் பணத்தை செலவு செய்யுங்கள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பாரமாரித்து மகிழ்ச்சி யுடன் இருப்பீர்கள்.

## கடகம்

உங்கள் அனைத்து முயற்சிகளும் வெற்றியை பெற்றுத் தரும். நீங்கள் அதிக அறிவாற்றலை பெறுவீர்கள்.

உங்களிடம் தொழில் சார்ந்த அணுகு முறை காணப்படும். இதனால் பணி யில் திறம்பட செயலாற்றுவீர்கள். சரியான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் மகிழ்ச்சியும் வளர்ச்சியும் காணப்படும்.

குடும்பத்தில் இணக்கம் காணப்படும். குடும்ப உறுப் பினர்களின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக் கும்.

இன்று சாதகமான நிதிநிலை காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதிய பணம் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.

## சிம்மம்

இன்றைய நாள் பரபரப்பாக இருக் கும். யோகா அல்லது தியானம் மேற் கொள்வதன் மூலம் அமைதி மற்றும் நன்மை விளையும்.

இன்று தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ள தால் கவனமாக பணியாற்றவும். உங்கள் அறிவுத்திறன் பயன்படுத்தி பணியாற்றவும்.

குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் குறித்த கவலை காணப்படும். இது நல்லுறவிற்கு ஏற்ற நாள் அல்ல.

இன்று பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. பணத்தை எச்சரிக்கையாக கையாளவும்.

இன்று முதுகுவலி மற்றும் தலை வலி பாதிப்பு காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## கன்னி

இன்று பலன்கள் கலந்து காணப்படும். சில தடைகளைக் கடந்து பணியில் வெற்றி பெறுவீர்கள். இன்று அதிக முயற்சி எடுக்க வேண்டும்.

இன்று விவாதங்கள் ஏற்படும் என்ற காரணத்தால் உங்கள் துணையுடனான உறவு மகிழ்சிகரமாக இருக்காது. நீங்கள் அனுசரித்துப் போவதன் மூலம் நன்மை பெறலாம்.

பண வரவுடன் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் தேவைகளை முன்னுரிமைப் படுத்தி அதன்படி செயலாற்றுங்கள்.

தலை வலியால் இன்று நீங்கள் அவதிப்பட நேரலாம். ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெற லாம்.

## துலாம்

உங்கள் தேவை அறிந்து அமைதி யாக செயல்படுங்கள். உடனடியாக உங்கள்விளைவுகளுக்குபலன்கிடைக்கா விடில் நம்பிக்கை இழக்காதீர்கள்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். உங்கள் சக பணியா ளர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் வீட்டு பெரியவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. கனிசமான இருப்பை பராமரிக்க தடைகளை எதிர் கொள்வீர்கள்.

பெரியவர்களின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவர்களின் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

## விருச்சிகம்

பொதுவாக இன்று சிறப்பான நாள். உங்கள் கடின உழைப்பை நம்புங்கள். உங்கள் நேர்மையான முயற்சி மூலம் உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

உங்கள் தன்னம்பிக்கை மற்றும் உறுதி மூலம் தடைகளை சமாளிப் பீர்கள். பணியின் மூலம் நன்மை பெறுவீர்கள்.

உங்களின் பிரியமானவர்களுடன் பேசும் போது கவனமாக உரையாற்றும் திறன் வேண்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக உள்ளது. இன்று பணவரவு காணப்படும்.

சூடு சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் தோல் பிரச்சினைகள் ஏற்படலாம். சரிவிகித உணவை மேற்கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.09.2024




கேளிக்கை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்சிகள் உங்களுக்கு புத்துணர்ச்சி அளிக்கும். அதிகமாக சிந்திப்பதை தவிர்த்திடுங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக காணப்படாது என்றாலும் கடவுள் அருளால் தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள்.

உங்கள் உறவில் குழப்பம் நேரலாம். எனவே வேறுபாட்டை களைந்து மகிழ்ச்சியை பராமரிக்கவும்.

நீங்கள் எதிர்பார்த்த வகையில் நிதிநிலைமை காணப்படாது. பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும் தோல் எரிச்சல் போன்ற பாதிப்புகளும் ஏற்படலாம்.




இன்று நன்மை விளையும் நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும். சில விருப்பங்கள் இன்று நிறைவேறலாம்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவீர்கள். அது உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் உறவில் மகிழ்ச்சியும் நல்ல பிணைப்பும் காணப்படும். குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இந்த நாளை கொண்டாடுவீர்கள்.

இன்று பணம் அதிகமாக காணப்படும். அதனை நீங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

இன்று உங்களுக்கு ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது.




உங்கள் தேவையின் முன்னுரிமை அறிந்து அதன்படி செயல்படுங்கள். அதிக பொறுப்புகள் காரணமாக மும்மரமாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் சூழ்நிலை சாதகமாக இருக்காது. தகவல் தொடர்பு குறைபாடு காரணமாக சக பணியாளர்களுடன் அமைதியின்மை காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. தேவையற்ற மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் குடும்பத்திற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்கவும்.

கால் வலி மற்றும் தலை வலி பாதிப்பு ஏற்படலாம். ஓய்வாக இருங்கள்.




இன்று நீங்கள் அதிக நேரம் செயல்பட வேண்டியிருக்கும். அதிக பொறுப்புகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மூழ்கியிருப்பீர்கள்.

பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும். உங்கள் நேரம் மற்றும் ஆற்றலை நன்கு பயன்படுத்த வேண்டும்.

குடும்பத்தில் சூடான விவாதங்கள் காணப்படும். அமைதியும் பொறுமையும் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

நிதிநிலையில் ஏற்றத்தாழ்வு காணப்படும். இன்று அதிக செலவுகளை எதிர் கொள்ள நேரும்.

அதிக பதற்றம் காரணமாக தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park